# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 34. அரசாங்க அமைச்சுகள் / திணைக்களங்கள் மற்றும் அதிகாரசபைகள்

நிறுவனத் தலைவர்களுக்கான வழிகாட்டல்கள்

- தன் கீழ் குறிப்பிடப்படும் விடயங்களைக் கண்காணித்து நிறுவனத் தலைவருக்குப் பின்னூட்டம் வழங்கும் பொருட்டு உங்கள் அமைச்சகம் / திணைக்களத்தில் உள்ள ஒரு அதிகாரி / களைச் சுகாதாரம் மற்றும் காப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக நியமியுங்கள் / குறித்தொதுக்குங்கள்.
- வழங்கல்கள்- முகக்கவசங்கள், கை தூய்மிப்பான்கள்/சவர்க்காரம், தரை / மலசலகூட தொற்று நீக்கிகள் ஆகியன போதுமானளவு கையிருப்பில் இருப்பதனை உறுதிசெய்க. மக்கள் கட்டிடத்திற்குள் நுழையும் வாயில்களில் பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்து அங்கு கை கழுவுவதற்கான வசதிகளை ஏற்படுத்துங்கள். நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவிலும் பாவிப்பதற்கு 70% மதுசாரத்தினை மூலமாக் கொண்டு தயாரிக்கப்படும் கை தூய்மிப்பான்கள் வழங்கப்பட வேண்டும்.
- பொது வழிகாட்டுதல்களுக்கு அமைய ஊழியர் கடமைச் சுற்றொழுங்கினை உருவாக்கி தினமும் கடமைக்கு வரவேண்டிய ஊழியர்கள் யாவர் என்பதனை அறியத்தரவும் (கட்டுப்பாடுகள் மேற்கொண்டு தளர்த்தப்படும்வரையில் 50 வீத மனிதவளத்துடன் அலுவலக இயக்கத்தினை மேற்கொள்க).
- கோவிட் -19 தடுப்பு உத்திகளைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் ஊழியர்களுடன் கலந்துரையாட ஒரு சுகாதார கல்வி அமர்வை ஏற்பாடு செய்க- வாடிக்கையாளருக்கு சேவைகளை வழங்கும் போதும் கடமையில் ஈடுபடுகையிலும் கை கழுவுதல், உடல் இடைவெளியினைப் பேணுதல், சுவாச நற்பழக்கங்கள் போன்றவை தொடர்பாக கலந்துரையாடலாம். இந்த அமர்வை ஏற்பாடு செய்ய உங்கள் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியைத் தொடர்பு கொள்ளலாம். சுகாதார சுகாதார மேம்பாட்டு பணியகத்தால் உருவாக்கப்பட்ட காணொளி / கேட்பொலி சாதனங்கள் இதன்போது பயன்படுத்தப்படலாம்.
- குழுக் கூட்டங்களது எண்ணிக்கையினைக் குறைக்கவும். மிகவும் அவசியமான சந்தர்ப்பங்களில் போதுமான உடல் இடைவெளியினைப் பேணியபடி அவ்வாறான கூட்டங்களைக் கூட்டலாம்.
- சுத்திகரிப்பு சேவை வழங்குனர்களுடன் தரை/ கதவுக் கைப்பிடிகள் / மேசைகள் /மின்தூக்கிகள் /மாடிப்படிக் கைபிடிச் சட்டங்கள் மற்றும் பிறவற்றினைச் சுத்தம் செய்வதன் முக்கியத்துவம் குறித்து கூட்டத்தினை ஏற்பாடு செய்து நடத்தவும் ( சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட வேலைத்தளங்களில் கொரோனா வைரஸ் தீவிர நோய் பரவல் தொடர்பான தயார்ப்படுத்தல் மற்றும் பதில் நடவடிக்கைகள் குறித்த செயல்பாட்டு வழிகாட்டுதல்களைப் பார்வையிடவும்).
- போதுமான அளவு முகக்கவசங்களைப் பெற முடிகிறதா என்பதையும், அலுவலகத்தைச் சுத்தம் செய்யும் செயல்முறை மற்றும் ஊழியர்களின் ஆரோக்கிய நிலை ஆகியவற்றினையும் அலுவலகத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த சுகாதார மற்றும் காப்பு அதிகாரி / கள் கண்காணிப்பார்கள்.
- ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குறைந்த எண்ணிக்கையிலான மக்களுக்கு சேவை செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக வாடிக்கையாளர்களுக்கு முறையான முன்பதிவு முறையை ஏற்பாடு செய்வதில் பாதுகாப்பு ஊழியர்கள் மற்றும் பிற ஊழியர்களுடன் கலந்துரையாடுங்கள்
- மின்தூக்கி ஒன்று இருந்தால், பாதுகாப்பான தூரத்தை பராமரிக்க ஒரு நேரத்தில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையை குறைக்க தரையில் உள்ள இடங்களைக் குறிக்கவும்
- பகிர்ந்து வழங்கக்கூடிய சில சேவைகளை பரவலாக்குவது குறித்துப் பிராந்திய மற்றும் மாகாண மட்ட ஊழியர்களுடன் கலந்துரையாடுங்கள். இது தலைமைப் பணிமனையில் சன நெருக்கடி ஏற்படுவதனைத் தடுக்கும்.
- நிகழ்நிலை (online) / தொலைபேசி (தொலைதூர) ஊடாக பணியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களது சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் வழிமுறைகளைக் கடைப்பிடித்து ஊக்குவியுங்கள்.

- பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக சுகாதாரச் கல்வி தொடர்பான சுவரொட்டிகள்/ பதாகைகள் ஆகியவற்றைக் காட்சிப்படுத்துதல். அலுவலகங்களில் பொது அறிவிப்பினை மேற்கொள்ளுவதற்கான ஒலிபெருக்கிகள் ஊடாக அடிக்கடி சமூக இடைவெளி, கை சுகாதாரம் மற்றும் சுவாச நற்பழக்கங்கள் குறித்து தெரிவிப்பதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவூட்டுதல்.
- வாடிக்கையாளர்களுக்கான அறிவுறுத்தல்களைக் காட்சிப்படுத்துவதன் மூலம் அவர்கள் வழிகாட்டலைப் பெறுவதனை மேம்படுத்தி மக்கள் ஒன்றுகலப்பதனைக் குறைக்கலாம்.
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது நிறுவனத் தலைவரின் பொறுப்பு ஆகும்.




சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020